# 4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

**முன்னிலை : திரு.M.நம்பிராஜன்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

**2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18– ம் நாள் புதன்கிழமை**
திருவள்ளுவர்ஆண்டு 2056, விசுவாவசு வருடம் மாசி திங்கள் 6–ம் நாள்

## அசல் வழக்கு எண்.328/2018

**[CNR No.TNTI25000627-2022]**

K.கோவிந்தசாமி ...... வாதி

/ எதிர் /

1) சரண்யா
2) யோகேந்திரா
3) இளவர் சஞ்சய்
3–ம் இளவருக்கு கார்டியனும் அடுத்த சிநேகிதியும்
தாயாருமான 1–ம் பிரதிவாதி சரண்யா
(Amended asper order in IA No.3/2025 dated 18.07.2025)

.......பிரதிவாதிகள்

இவ்வழக்கானது என் முன்னர் 16.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.பார்த்திபன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.செந்தில்ராமன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்டும், சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

வாதிக்கு, பிரதிவாதிகள் வாதியிடம் கடன்பெற்ற ராமகிருஷ்ணன் வாரிசுகள் என்ற முறையில் தொகை ரூ.20,52,000/–(ரூபாய் இருபது லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம்) மட்டும் செலுத்த வேண்டும் என்றும், தாவா அசல்தொகை ரூ.18,00,000/–க்கு 12% ஆண்டு பின்வட்டியுடன் செலுத்தக்கேட்டும், மற்றும் இவ்வழக்கின் செலவுத் தொகை கேட்டும், மேலும் இறந்துபோன ராமகிருஷ்ணன் சொத்துக்களிலிருந்து கிடைக்கும்படி தீர்ப்பு பகர வேண்டும் என்று கேட்டும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் :**

**2.1)** மேற்படி வாதிக்கும் 1ம் பிரதிவாதியின் கணவரும் 2ம் பிரதிவாதி மற்றும் இளவர் பிரதிவாதியின் தகப்பனாருமான ராமகிருஷ்ணன் என்பவருக்கும் வியாபார ரீதியாக கடந்த பல வருடங்களாக நல்ல பழக்க வழக்கங்கள் இருந்து வந்தது, அதன்அடிப்படையில் மேற்படி 1–ம் பிரதிவாதியின் கணவரும் 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் இளவர் பிரதிவாதியின் தகப்பனாருமான காலஞ்சென்ற ராமகிருஷ்ணன் மேற்படி வாதியிடம் தகுந்த பிரதிப்பிரயோஜனத்தின் பேரில் ரூ.18,00,000/– (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்) வியாபார செலவிற்காக வேண்டுமென கடந்த 2017ம் வருடம் மே மாதம் கேட்டதன்பேரில் மேற்படி ராமகிருஷ்ணன் மீது இருந்த நம்பிக்கையின் அடிப்படையிலும் பழக்க வழக்கத்தின் அடிப்படையிலும் தனக்கு தெரிந்த நண்பர்களிடமும் மூன்றாம் நபர்களிடமும் மேற்படி தொகையை சேகரம் செய்து தருவதாக வாதி கூறியுள்ளார். அதன்படி கடந்த 11–06–2017 ம் தேதியன்று மேற்படி ராமகிருஷ்ணன் வாதியின் வீட்டிற்கு வந்து கடனாக ரொக்கமாக ரூ.18,00,000/– (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்)பெற்றுக் கொண்டு, மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூபாய் ஒன்று வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியையும் அசலையும் மேற்படி வாதி வேண்டும் போது வாதிக்காவது அல்லது அவருடைய உத்திரவு பெற்ற நபர்களுக்காவது ரொக்கமாய்த் திருப்பிச் செலுத்துவதாகவும் மற்றும் இதர ஷரத்துக்கள் கண்டும் மேற்படி தேதியில் மேற்படி காலஞ்சென்ற ராமகிருஷ்ணன் வாதியின் வீட்டில் வைத்து ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளார். மேலும் மேற்படி கடன் பெற்றுக் கொண்டு மேற்படி கடனுக்கு ஆதரவாக ராமகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட கடந்த 20–04–2017ந் தேதிய உடுமலைப்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவான கிரைய ஆவண எண்.2758/2016 அசல் ஆவணத்தை வாதி வசம் ஒப்படைத்துள்ளார்.

**2.2)** வாதி மேற்படி பிராமிசரி நோட்டின்படி ஏற்படுகின்ற அசல் வட்டித் தொகைகளைச் செலுத்தும்படி மேற்படி காலஞ்சென்ற ராமகிருஷ்ணன் அவர்களை பலமுறை நேரில் சந்தித்துச் செலுத்தும்படி வலியுறுத்திக் கேட்டும் அவர் செலுத்துவதாக கூறி வந்தார். இந்நிலையில் மேற்படி ராமகிருஷ்ணன் கடந்த 28–05–2018ந் தேதியன்று பிரதிவாதிகள் மூவரையும் அவருக்கும் அவரின் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களுக்கு

வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார். மேற்படி 1 முதல் 3 இலக்கமிட்ட பிரதிவாதிகள் மேற்படி இறந்துபோன ராமகிருஷ்ணனின் சொத்துக்களை வாரிசு கிரமபடி அடைந்து அனுபவித்து வருகிறார்கள். மேற்படி வாதி ராமகிருஷ்ணனின் இறுதி சடங்கில் கலந்து விட்டு, அதற்கு பிறகு பலமுறை 1ம் பிரதிவாதியை மேற்படி ராமகிருஷ்ணன் பெற்ற கடன் தொகையை அசல் வட்டியுடன் திருப்பி செலுத்தும்படி கேட்க, பிரதிவாதிகளும் செலுத்துவதாக கூறி வீண் காலம் கடத்தி வருகின்றார்கள். மேற்படி காலஞ்சென்ற ராமகிருஷ்ணன் பெற்ற கடன் தொகையை வாரிசுகள் என்ற முறையில் சட்டப்படி பிரதிவாதிகள் செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள். பின்னிட்டும் தாவா வாதி, பிரதிவாதிகளை மேற்படி பிராமிசரி நோட்டின் படி ஏற்படும் அசல் வட்டி தொகைகளை செலுத்தும்படி பலமுறை நேரில் கேட்டும் யாதொரு தொகையும் செலுத்தாமல் வேண்டுமென்றே வீண்காலங்கடத்தி வந்தனர் எனவே, வாதி வழக்கறிஞர் மூலம் கடந்த 03.08.2018 ந் தேதி அறிவிப்பு அனுப்பினார். மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் கடந்த 04.08.2018 ந் தேதியன்று பெற்றுக் கொண்டனர். அதன் பின்னிட்டும் பிரதிவாதிகள் எவ்வித பதிலும் கொடுக்காமலும் மேற்படிதாவா கடனுக்குரிய எவ்வித அசல், வட்டி தொகைகளை செலுத்தாமலும் வீண் காலம் கடத்தியும், 1ம் பிரதிவாதி, வாதி மீது உடுமலைப்பேட்டை காவல் துணைக் கண்காணிப்பாளிடம் பணம் கேட்டு மிரட்டுவதாக ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளார். புகாரின் பேரில் விசாரித்த காவலதிகாரிகள் சிவில் வழக்கு என்பதால் தகுந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு கூறி விட்டனர். எனவே மேற்படி பிராமிசரி நோட்டின்படி செல்லாக வேண்டிய அசல், வட்டி தொகைகளை வசூலிக்கும் பொருட்டு இந்த தாவாவை நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்துள்ளார். மேற்படி லேட் ராமகிருஷ்ணன் தாவா கடனை வியாபார செலவுக்காக பெற்றுள்ளார். ஆகவே, வாதி மேற்படி தாவா தொகைக்கு 12% வீதம் வட்டி கோரியுள்ளார். எனவே வாதி பிரதிவாதிகளிடமிருந்து தொகை ரூ.20,52,000/-(ரூபாய் இருபது லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம்) மட்டும் செலுத்த வேண்டும் என்றும், தாவா அசல்தொகை ரூ.18,00,000/-க்கு 12% ஆண்டு பின்வட்டியுடன் செலுத்தக்கேட்டும், மற்றும் இவ்வழக்கின் செலவுத் தொகை கேட்டும், வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :-**

**3.1)** வாதியின் தாவா வழக்குரை பொய்யானது, மோசடியானது மற்றும் சட்டநிலையில் செல்லத்தக்கதல்ல. எதிர்வழக்குரையில் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க வேண்டும். 1-ம் பிரதிவாதியின் கணவரும் 2-ம் பிரதிவாதி, 3 இலக்கமிட்ட இளவர் பிரதிவாதிகளின் தகப்பனாருமான காலஞ்சென்ற ராமகிருஸ்ணன் மேற்படி வாதியிடம் தகுதிபிரதிபிரயோஜனத்தின் பேரில் ரூ.18,00,000/- (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்) வியாபார செலவுக்காக வேண்டுமென கடந்த 2017 ம் வருடம் மே மாதம் கேட்டதன்பேரில் கடந்த 11-06-2007 ம் தேதியன்று மேற்படி ராமகிருஸ்ணன் வாதியின் வீட்டிக்கு வந்து கடனாக ரூ.18,00,000/- (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்) பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 100/-க்கு ரூபாய் ஒன்று வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியையும் அசலையும் மேற்படி வாதி வேண்டும்போது வாதிக்காவது அல்லது அவருடைய உத்திரவு பெற்ற நபருக்காவது ரொக்கமாக விரும்பிச்செலுத்துவதாகவும் மற்றும் இதர சரத்துக்கள் கண்டும் மேற்படி தேதியில் மேற்படி காலஞ்சென்ற ராமகிருஸ்ணன் வாதியின் வீட்டிக்கு வந்து ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்ததாக கூறியிருப்பது முழுப்பொய் சங்கதிகள் ஆகும். மேலும் மேற்படி கடனுக்கு ஆதரவாக ராமகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்ட கடந்த 20-04-2017 ம் தேதிய உடுமலைப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான கிரய ஆவண எண் 2758/2017 ன் அசல் ஆவணத்தை வாதி வசம் ஒப்படைத்ததாக கூறியிருப்பது பொய். ஏனெனில் தனக்கென்று சொத்தை வாங்கும் வசதியும் தகுதியும் உள்ள 1 ம் பிரதிவாதியின் கணவருக்கு வங்கிகளில் கடன்பெற்று தொழில் செய்யும் அவருக்கு, வெளியில் வட்டிக்கு பணம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்பது மிகத்தெளிவு. மேலும் கிரய ஆவணத்தை ஒப்புவித்தும் அதை ஒப்படைவு செய்வதை பதிவு செய்யப்படாமல் அதன் அடிப்படையில் ஆவணத்தை ஒப்படைத்தால் சட்டப்படி செல்லத்தகாதது என்பது பதிவுத்துறை சட்டம் என்பது வாதிக்கும் தெரிந்த உண்மை. இதில் இருந்தே வாதியின் பொய்த்தன்மை நன்கு விளங்கும். வாங்காத கடனுக்கு வாதி 1-ம் பிரதிவாயிடம் வட்டித்தொகைகளை செலுத்த வேண்டுமென கூறி வந்ததாக கூறியிருப்பது பொய்சங்கதிகள் ஆகும். வாதி எப்போதும் இந்தப் பிரதிவாதிகளை

அனுகி தொகைகளை கேட்டதில்லை. வாதி கடந்த 31–08–2018ம் தேதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்ததாகவும் அதனைப்பெற்றுக்கொண்ட இந்த பிரதிவாதிகள் எவ்வித பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்பதால் மட்டுமே வாதியின் தாவா நிலைக்கத்தக்கது அல்ல. இந்த பிரதிவாதி வாதியின் பேரில் புகார் கொடுத்ததாக கூறியிருப்பது வாதியின் மிரட்டிலினால் மட்டுமே ஒழிய வேறுன்றும் உள்நோக்கம் இல்லை. ஆனால் வாதியோ தனது பலம் மற்றும் அரசியல் செல்வாக்கால் அனைத்தையும் மறைத்து இந்த அநீத தாவாவை பிரதிவாதிகளின் பேரில் தொடர்ந்துள்ளார்.

**3.2)** வாதி மேற்படி லேட் ராமகிருஸ்ணனின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டதாக தாவாவில் கூறிருக்கும் பட்சத்தில் எந்தத்தேதில் கலந்து கொண்டார் என்பதை கூறவில்லை. மேற்படி இறந்துபோன இராமகிருஷ்ணன் சென்னை மதுரவாயில் என்ற இடத்திலும், கர்நாடகா ஒஸ்கட்டா என்ற இடத்திலும், தமிழ்நாடு சேலம், புத்தூர், என்ற இடத்திலும், மேலும் ஆந்திரா மாநிலம் பலமநேரியிலும், கோழி முட்டைகளை ஒட்டு மொத்தமாக வாங்கி விற்பனை செய்யும் தொழிலை நடத்தி வந்தார். மேற்படி (லேட்)இராமகிருஷ்ணன் பல மாநிலங்களில் தனது தொழிலை அபிவிருத்தி செய்ய கண்காணிப்புக்காக ஒவ்வொரு கிளையிலும் தனக்கு பரிட்சையமான ஆட்களை நியமித்து மேற்பார்வை செய்து வந்தார். உடுமலைப்பேட்டையில் இயங்கி வந்த "கமலம் டிரேடர்ஸ்" என்ற நிறுவனத்திக்கு தனது தூரத்து உறவினரான செல்வம் என்பவரை கூலியாளாக நம்பிக்கையின் பொருட்டு நியமித்து மேற்பார்வை செய்து வந்தார். ரங்கநாதன் என்பவரையும் மேலும் உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் நடந்து வரும் அ.வ.எண். 350/2018 என்ற வழக்கின் வாதியான மௌனசாமி மற்றும் அதே நீதிமன்றத்தில் 318/2018 ல் வாதியான தேவராஜ் என்பவரையும் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதிக்கோ அவரது கணவர் இராமகிருஷ்ணனுக்கோ எவ்விதத்திலும் பரிட்சையமானவர்கள் இல்லை. உண்மையில் இந்த வழக்கின் வாதி கோவிந்தசாமி மேலே சொன்ன ரங்கநாதன் தேவராஜ், மௌனசாமி ஆகியோர்கள் உடுமலையை சேர்ந்த செல்வம் என்பவரின் துர்போதனையின் பேரில் சட்ட முறனான வகையில் சொத்துக்களை அபகரிக்கும் ஒரே நோக்கத்தில் இந்த அநீத தாவாவை தூண்டுதலின் பேரில் தாக்கல் செய்துள்ளார்.

**3.3)** மேற்படி இறந்துபோன ராமகிருஷ்ணன், உடுமலையில் உள்ள "கமலம் டிரேடர்ஸ்" பெயரில் உள்ள நிறுவனத்தை நடத்தி வர செல்வம் என்பவரை நியமித்திருந்தார். மேற்படி நிர்வாகப் பொறுப்பிலிருந்த செல்வத்திற்கு மேற்படி இறந்துபோன இராமகிருஷ்ணன் கொடுத்து வந்த மாத சம்பளத்தை தவிர்த்துவேறு எந்த வருமானமும் இல்லை. (லேட்)இராமகிருஷ்ணன் உடுமலைக்கு கடந்த 7 வருடங்களுக்கு முன்பு குடிபெயர்ந்து தனது குழந்தைகளின் கல்விக்காக அமராவதியிலும் பின்னிட்டு உடுமலைக்கும் குடும்பத்துடன் குடியேரிய போது வாடகை வீட்டில் இருந்த காரணத்தினால் குடோனில் உள்ள லாக்கரில் மட்டுமே அவருடைய அனைத்து ஆவணங்களையும் வைத்து பராமரித்து வந்தார். இறந்துபோன இராமகிருஷ்ணன் அதிக வருமானத்துடனே வாழ்ந்து வந்தவர் ஆவார். மேலும் சொத்துக்களை அவர் தொழில் மூலம் வந்த வருமானத்தைக் கொண்டு வாங்கிய நபர் ஆவார். இவ்வாறான சூழ்நிலையில் வாதியிடத்திலும் மற்ற மேற்சொன்ன வழக்கின் வாதிகளிடத்திலும் தொகைகளை கடன் பெற்றதாக தாவாக்கள் தாக்கல் செய்திருப்பது பொய் சங்கதிகள் ஆகும். ஏனெனில் மேற்படி இறந்துபோன இராமகிருஷ்ணன் உயிருடன் இருந்த சமயத்தில் குடோனை நிர்வகிக்கும் வேலையாளாக மாதச் சம்பளம் பெற்று வந்த செல்வம் என்பவர் மேற்படி ராமகிருஷ்ணன் இறந்தவுடன் சுமார் 1 கோடி மதிப்பில் "கமலம் டிரேடர்ஸ்" போலவே குடோனை அமைத்து வேறு பெயரில் நிறுவனம் அமைத்து தொழில் செய்து வருவது என்பது "கமலம் டிரேடர்ஸில் உள்ள தொகைகளை முழுவதுமாக சட்ட முறணான வகையில் எடுத்துக் கொண்டும், அதன் மேற்பட்டு இந்த பிரதிவாதிகளுக்கு வர வேண்டிய சொத்துக்களை முற்றிலுமாக முடக்கி சட்ட முறனான வகையில் அபகரிக்க வேண்டி முட்டை குடோன் லாக்கரில் வைத்திருந்த சொத்து ஆவணங்களை எடுத்து சட்டத்திற்கு புறம்பாக காசோலைகள், புரோ நோட்டுக்கள் ஆகியவற்றை தயாரித்து அநீதமான முறையில் கூட்டுச்சதி சதி செய்து தாவாக்களை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லாது. தாவாவில் சொல்லியிருக்கும் வியாஜ்ஜிய மூலம் பொய்யானது. எனவே இந்த பிரதிவாதிகளின் செலவு தொகைகளுடன் தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும்.

**4) வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.**

1. வாதியிடம், 1–ம் பிரதிவாதியின் கணவர் ரூ.18,00,000/– கடனாகப் பெற்றுக்கொண்டு 11.06.2017 தேதியில் ஒரு கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்று கூறுவது உண்மையா ?
2. வாதி, பிரதிவாதிகளின் சொத்துக்களை அபகரிக்க சட்ட முரணான வகையில் வழக்கு தொடர்ந்துள்ளார் என்று கூறுவது சரியா?
3. வாதி தாவாவில் கோரியபடி வழக்கு தொகையை பெற உரிமை உடையவரா ?
4. வாதிக்கு கிடைக்கும் பரிகாரம் என்ன ?

**5)** இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆகவும், அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், ராமலிங்கம் என்பவர் வா.சா.2 ஆகவும், ராமகிருஷ்ணன் என்பவர் வா.சா.3 ஆகவும், தம்புராஜ் என்பவர் வா.சா.4 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். பிரதிவாதிகள் தரப்பில், லேட்.ராமகிருஷ்ணன் மனைவி சரண்யா பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், அவர் மூலமாக பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களும், யோகேந்திரா என்பவர் பி.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக பி.சா.ஆ.6 முதல் பி.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>வினா எண்.1 முதல் 3:–</u>**

**<u>6. வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்</u>**

**6.1)** வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், வாதியும், இறந்துபோன ராமகிருஷ்ணனும் வியாபார ரீதியாக பழக்கம் உடையவர்கள் என்றும், மேற்படி ராமகிருஷ்ணன் 1–வது பிரதிவாதியின் கணவர் என்றும், 2, 3 பிரதிவாதிகளின் தந்தை என்றும், கடந்த 11.06.2017 ம் தேதியன்று மேற்படி இறந்துபோன ராமகிருஷ்ணன் தன்னுடைய வியாபார செலவுக்காக வாதியிடம் ரூ.18,00,000/– கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக ஒரு கடனுறுதிச்சீட்டை வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்தார் என்றும், மேற்படி தொகைக்கு ரூ.100/–க்கு மாதம் 1க்கு 1% வட்டி தருவதாகவும், மேற்படி ராமகிருஷ்ணன் ஒத்துக்கொண்டு மேற்படி கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், மேலும் வாதி கேட்கும் போது மேற்படி தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்துவதாகவும் மேற்படி ராமகிருஷ்ணன் கடனுறுதிச்சீட்டில் தெரிவித்துள்ளார்

என்றும், மேலும் கடனுக்கு ஆதரவாக அவருக்குப் பாத்தியப்பட்ட 20.04.2017 தேதியிட்ட உடுமலைப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணம் எண். 2758/2016 என்ற ஆவணத்தை வாதியிடம் ஒப்படைத்துள்ளார் என்றும், மேற்படி கடனுறுதிச்சீட்டை வாதி வீட்டில் வைத்து மேற்படி ராமகிருஷ்ணன் எழுதிக் கொடுத்தார் என்றும், மேற்படி கடனுறுதிச்சீட்டை பத்திர எழுத்தர் என்ற முறையில் ராமகிருஷ்ணன் அழைத்ததன் பேரில் ராமலிங்கம் என்பவர் எழுதியுள்ளார் என்றும், மேற்படி ராமலிங்கம் இந்த வழக்கில் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும், மேற்படி கடனுறுதிச்சீட்டில் வா.சா.3 ராமகிருஷ்ணன் என்பவர் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளார் என்றும் வாதிட்டார்.

**6.2)** மேலும் அவர் வாதிடும்போது கடனுறுதிச்சீட்டில் தெரிவித்தவாறு மேற்படி ராமகிருஷ்ணன் அசலையும் வட்டியையும் வாதிக்கு செலுத்தாமல் கடந்த 28.05.2018 அன்று இவ்வழக்கு பிரதிவாதிகளை தன்னுடைய சொத்துக்கு வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படி ராமகிருஷ்ணன் இறந்த பிறகு பிரதிவாதிகள் அவர் விட்டுச்சென்ற சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றும், வாதி மேற்படி ராமகிருஷ்ணன் காலமான பிறகு கடன் தொகையை வட்டியுடன் திரும்பச் செலுத்த வேண்டும் என்று 1–வது பிரதிவாதியிடம் பலமுறை கேட்டும் 1வது பிரதிவாதி வீண் காலதாமதம் செய்ததால் அசலையும் வட்டியையும் செலுத்தக்கோரி கடந்த 03.08.2018 அன்று பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், மேற்படி அறிவிப்பைப் பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் வாதிக்கு எந்தவித பதிலும் அனுப்பவில்லை என்றும், அசலையும் வட்டியையும் திரும்பச் செலுத்தாமல் காலதாமதம் செய்து வாதிக்கு எதிராக உடுமலைப்பேட்டை காவல் துறை துணை கண்காணிப்பாளரிடம் 1–வது பிரதிவாதி பொய்யான புகாரை கொடுத்தார் என்றும், காவல் துறை அதிகாரிகள் தகுந்த உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு தெரிவித்து விட்டார்கள் என்றும், எனவே வாதி அசல் தொகையை வட்டியுடன் பிரதிவாதிகள் திரும்ப செலுத்தக்கோரி இந்த அசல் வழக்கை தாக்கல்செய்துள்ளார் என்றும் வாதிட்டார்.

**6.3)** மேலும், பிரதிவாதிகள் இந்த வழக்கில் இறந்துபோன ராமகிருஷ்ணன் முட்டைகளை மொத்த கொள்முதல் செய்து கமலம் டிரேடர்ஸ் என்ற பெயரில் விற்பனை

செய்து வந்தார் என்றும், மேற்படி கமலம் டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு ராமகிருஷ்ணனின் உறவினர் செல்வம் என்பவரை நிர்வாகத்திற்காக கூலியாளாக நியமித்திருந்ததாகவும் மேற்படி ராமகிருஷ்ணன் காலமான பிறகு மேற்படி செல்வம், ராமகிருஷ்ணனின் உடுமலைப்பேட்டையில் உள்ள கமலம் டிரேடர்ஸ் அலுவலத்தில் லாக்கரில் வைத்திருந்த சொத்து ஆவணங்களையும், மற்ற ஆவணங்களையும் பணத்தையும் சட்ட முறனாக மேற்படி செல்வம் எடுத்துக்கொண்டு இந்த வாதியுடன் கூட்டுசதி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும், மேற்படி ராமகிருஷ்ணன் கடனுறுதிச்சீட்டு வாதிக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்று பொய்யாக தெரிவித்துள்ளார்கள் என்றும், வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், இறந்துபோன ராமகிருஷ்ணன் கடந்த 11.06.2017 அன்று வாதி வீட்டிற்கு வந்து ரூ.18 லட்சம் கடனாக வாங்கிக்கொண்டு கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்தார் என்று வாதி மேற்படி கடனுறுதிச்சீட்டை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளார். மேற்படி கடனுறுதிச்சீட்டில் சாட்சிக்கையொப்பம் இட்ட ராமகிருஷ்ணன் என்பவர் இந்த வழக்கில் வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி கடனுறுதிச்சீட்டை எழுதியவர் வா.சா.2 ராமலிங்கம் ஆவார். எனவே வாதி அவர் தரப்பு வழக்கை முதல் நோக்கில் நிரூபித்துள்ளார் என்றும், பிரதிவாதிகள் தரப்பில் கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் மேற்படி இறந்துபோன ராமகிருஷ்ணனுடைய கையொப்பம் இல்லை என்று குறிப்பாக மறுக்கவில்லை. கடனுறுதிச்சீட்டை ராமகிருஷ்ணன் வாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்று மட்டும் தான் மறுத்துள்ளார்கள். மேலும், மேற்படி செல்வம் மூலமாக கமலம் டிரேடர்ஸ் அலுவலக லாக்கரில் இருந்து சட்ட விரோதமாக எடுத்துவரப்பட்ட ஆவணங்களை வைத்து பொய்யாக கடனுறுதிச்சீட்டு வாதியால் தயார்செய்யப்பட்டுள்ளது என்று பிரதிவாதிகள் தெரிவித்தால், அதை நிரூபிக்கும் பொறுப்பு பிரதிவாதிகளை சாரும், ஆனால் அவர்கள் தவறிவிட்டார்கள் என்றும், வாதியை பிரதிவாதிகளுக்கு தெரியாது என்று சொல்லியுள்ளார்கள், ஆனால், வாதியின் மகனுடைய திருமணத்திற்கு 1–வது பிரதிவாதியும் இறந்துபோன ராமகிருஷ்ணனும் கலந்து கொண்டுள்ளார்கள் என்றும், அதற்கான புகைப்படம், குறுந்தகடு ஆகியவை இந்த வழக்கில் தாக்கல்செய்யப்பட்டு வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11 வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே

வாதியை பிரதிவாதிகளுக்கு முன்பே தெரியும் என்றும், எனவே நீதிமன்றம் வாதி கோரியவாறு பரிகாரங்கள் வழங்கவேண்டும் என்று கீழ்க்காணும் முன்தீர்ப்புகளை மேற்கோள்காட்டினார்.

**1) A.S.(MD)No.126 of 2024**

**and**

**C.M.P.(MD)No.6651 of 2024**

**R.Singaravadivelan //Vs// Duraisenthil**

**2) A.S.No.89 of 2018**

**and**

**C.M.P.No.2402 of 2018**

**Kathiresan //Vs// M.N.Balamurugan**

**3) S.A. No.1425of 2007**

**Arokiasamy //Vs// Joseph Udayar**

**7. பிரதிவாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம்:–**

**7.1)** பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், இந்த வழக்கில் தாக்கல்செய்துள்ள கடனுறுதிச்சீட்டு இறந்துபோன ராமகிருஷ்ணனால் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், அதுபோல் அசல் கிரைய ஆவணங்கள் எதையும் மேற்படி ராமகிருஷ்ணன் கடன் வாங்கிக்கொண்டு வாதியிடம் ஒப்படைக்கவில்லை என்றும், இறந்துபோன ராமகிருஷ்ணன் சென்னை, மதுரவாயல், கர்நாடகா, சேலம், ஆந்திரா ஆகிய இடங்களில் கோழி முட்டைகளை மொத்தமாக விலைக்கு வாங்கி விற்பனை செய்யும் தொழிலை செய்துவந்தார் என்றும், உடுமலைப்பேட்டையில் மேற்படி முட்டை வியபாபாரம் சம்பந்தமான மொத்த வியாபாரத்திற்காக கமலம் டிரேடர்ஸ் என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை நடத்தி வந்தார் என்றும், மேற்படி நிறுவனத்திற்கு ராமகிருஷ்ணனின் உறவினரான செல்வம் என்பவரை நிர்வாகத்திற்காக கூலியாளாக நியமித்திருந்தார் என்றும், மேற்படி ராமகிருஷ்ணன் காலமானபிறகு உடுமலைப்பேட்டையில் உள்ள கமலம் டிரேடர்ஸ் அலுவலகத்தில் லாக்கரில் வைத்திருந்த பணம் மற்றும் சொத்து ஆவணங்கள் மற்றும் பல ஆவணங்கள் ஆகியவற்றை மேற்படி செல்வம் சட்டத்திற்கு விரோதமாக

எடுத்துச்சென்றுவிட்டார் என்றும், மேற்படி செல்வம் ராமகிருஷ்ணன் காலமான பிறகு தனியாக முட்டை வியாபாரம் ஆரம்பித்து எடுத்துச்சென்ற ஆவணங்களை பயன்படுத்தியும் பொய்யாக காசோலைகள் புரோநோட்டுக்கள் ஆகியவற்றை தயாரித்து பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை வாதி மூலமாக தாக்கல் செய்துள்ளார் என்றும் வாதிட்டார்.

**7.2)** மேலும், வாதிக்கு மேற்படி ரூ.18,00,000/- கடன் கொடுக்கும் அளவிற்கு வசதியில்லை என்றும், அவர் வருமானவரிக் கணக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், வாதியிடம் ரூ.18,00,000/- ரொக்கமாக வைத்திருந்ததற்கு எவ்வித ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் மத்திய அரசு பணமதிப்பிழப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் மிகப்பெரிய தொகையான ரூ.18,00,000/-த்தை வாதி கடனாக இறந்துபோன ராமகிருஷ்ணனுக்கு ரொக்கமாக கொடுத்ததாக சொல்வது ஏற்கத்தக்க வகையில் இல்லை என்றும், பிரதிவாதிகள் கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் இறந்துபோன ராமகிருஷ்ணனுடைய கையொப்பம் இல்லை என்று மறுத்துள்ள நிலையில், மேற்படி கையொப்பத்தை நிரூபிப்பதற்கு வாதி கடனுறுதிசீட்டை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி வைக்க எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும், இறந்துபோன ராமகிருஷ்ணன் கடன் வாங்கியதாக சொல்லப்படும் காலகட்டமான 11.06.2017 ல் மேற்படி ராமகிருஷ்ணன் நல்ல வசதியான சூழ்நிலையில் இருந்தார் என்றும், அச் சூழ்நிலையில் வாதியிடம் ராமகிருஷ்ணனுக்கு கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், வா.சா.2 ஆன ராமலிங்கம் வா.சா.3 ஆன ராமகிருஷ்ணன் வா.சா.4 தம்புராஜ் ஆகியோர்கள் வாதிக்கு வேண்டிய அக்கறையுள்ள நபர்கள் என்றும், எனவே அவர்களுடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும், இறந்துபோன ராமகிருஷ்ணன் வாங்கிய கடனுக்காக கிரைய ஆவணத்தை ஆதரவாக கொடுத்திருந்தால் அதுசம்பந்தமாக பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்திருப்பார்கள் என்றும், கடனுறுதிச்சீட்டை எழுதிக் கொடுத்திருக்க மாட்டார் என்றும், வாதி தாக்கல் செய்ததாக சொல்லப்படும் வருமானவரிக் கணக்கை இந்த வழக்கில் வாதி தாக்கல் செய்யவில்லை, அவ்வாறு தாக்கல்செய்தால் அதில் இறந்துபோன ராமகிருஷ்ணனுக்கு கொடுத்த கடன் பற்றி சொல்லப்பட்டிருக்கும், எனவே, இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டு கீழ்க்காணும்

முன்தீர்ப்புகளை மேற்கோள் காட்டி வாதிட்டார்.

**1) Civil Appeal No.5200 of 2025**

**2) 1995 SCC (6) 213, JT 1995 (7) 48**

**3) 1995 Scale (5) 615**

**4) A.S.No.801 of 1996 –**

**Kathirvelu - …...Appellant/Plaintiff**

**/Vs/**

**Anbazhagan - …….Respondent / Defendant**

**5) Appeal (Civil) 3164 – 3166 of 1997 -**

**N. Kamalam (Dead) and another - …...Petitioner**

**//Vs/**

**Ayyasamy and another …...Respondent**

**8.1)** நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் சாட்சிகளையும் ஆவணங்களையும் நன்கு பரிசீலனை செய்கையில், வாதி தரப்பில் கடந்த 11.06.2017 அன்று இறந்துபோன ராமகிருஷ்ணன் ரூ.18,00,000/–த்தை ரொக்கமாக கடனாக பெற்று கடனுறுதிச்சீட்டை வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்ததாகவும் மேற்படி கடனுறுதிச்சீட்டில் மாதம் 1 க்கு ரூ.100/–க்கு ரூ.1 வீதம் வட்டி தருவதாக மேற்படி ராமகிருஷ்ணன் ஒத்துக்கொண்டு வாதிக்கு எழுதிக் கொடுத்ததாகவும், மேலும், மேற்படி கடனுக்கு ஆதரவாக மேற்படி இறந்துபோன ராமகிருஷ்ணன் அசல் கிரைய ஆவணத்தை வாதியிடம் கொடுத்ததாகவும், மேற்படி கடனுறுதிச்சீட்டில் குறிப்பிட்டுள்ள அசலையும் வட்டியையும் வாதிக்கு கொடுக்காமல் மேற்படி ராமகிருஷ்ணன் காலமாகிவிட்டதாக தெரிவித்துள்ளார். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆன கடனுறுதிச்சீட்டை பரிசீலனை செய்கையில், மேற்படி இறந்துபோன ராமகிருஷ்ணன் ரூ.18,00,000/–த்தை வாதியிடம் கடனாகப் பெற்றுக்கொண்டு மாதம் 1 க்கு ரூ.100/–க்கு ரூ.1 வீதம் வட்டி கொடுப்பதாக வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ள விவரம் தெரியவந்துள்ளது. மேற்படி ஆவணத்தில் ராமகிருஷ்ணன் என்பவர் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ள விவரமும் தெரியவந்துள்ளது.

மேற்படி ராமகிருஷ்ணன் வாதி தரப்பில் வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள விவரம் தெரியவந்துள்ளது. மேற்படி கடனுறுதிச்சீட்டை எழுதியதும் சாட்சியுமான ராமலிங்கம் கையொப்பம் இட்டதாக வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ராமலிங்கம் இந்த வழக்கில் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள விவரமும் தெரியவந்துள்ளது.

**8.2)** மேற்படி வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சாட்சிகள் கடனுறுதிச்சீட்டை இறந்துபோன ராமகிருஷ்ணன் எழுதிக்கொடுத்து வாதியிடம் கடன் பெற்றதாகவும், மேற்படி கடனுறுதிச்சீட்டை வா.சா.2 ராமலிங்கம் என்பவர் எழுதியதாகவும், வா.சா.3 ராமகிருஷ்ணன் சாட்சிக்கையொப்பம் கடனுறுதிச்சீட்டில் போட்டதாகவும் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி சாட்சிகளை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தாலும், மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை உருக்குலைக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை அமையவில்லை. வா.சா.ஆ 2 ஆன கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்கையில், இறந்துபோன ராமகிருஷ்ணன் உடுமலைப்பேட்டை வட்டம், பெரியகோட்டை ஊராட்சி, தாராபுரம் ரோடு, சிவசக்தி காலனியில் வசிக்கும் V.சுரேஷ்குமார் என்பவரிடமிருந்து கடந்த 20.04.2017 ல் வாங்கிய ஒரு சொத்து சம்பந்தமான கிரைய ஆவணம் எண்.2758/2017 என்று தெரியவந்துள்ளது. மேற்படி ஆவணம் உடுமலைப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் தெரிய வந்துள்ளது. வாதி தரப்பில் கடன் வாங்கும்போது மேற்படி கிரைய ஆவணத்தை இறந்துபோன ராமகிருஷ்ணன் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆன வழக்கறிஞர் அறிவிப்பை பரிசீலனை செய்கையில் வாதி கடந்த 03.08.2018 அன்று பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ள விவரம் தெரியவந்துள்ளது. வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆகியவற்றை பரிசீலனை செய்கையில், மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. மேற்படி அறிவிப்பில் இறந்துபோன ராமகிருஷ்ணன் 11.06.2017 அன்று ரூ.18,00,000/- கடன் வாங்கியதாகவும் அதற்கு கடனுறுதிச்சீட்டு மற்றும் கிரைய ஆவணம் ஒப்படைத்ததாகவும் சொல்லியுள்ள விவரம் தெரியவந்துள்ளது. மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் தரப்பில் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்று தெரிய வந்துள்ளது.

பிரதிவாதிகள் தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பியதாக எவ்வித ஆவணமும் முன்னிலைப்படுத்தவில்லை.

**8.3)** பிரதிவாதிகள் தரப்பில் ரூ.18,00,000/– கடன் கொடுக்கும் அளவிற்கு வாதிக்கு வசதி இல்லை என்றும், மேலும், இறந்துபோன ராமகிருஷ்ணனுக்கு கடன் வாங்கியதாக சொல்லப்படும் சமயத்தில் நல்ல வசதியுடன் இருந்தார் என்றும், எனவே கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று வங்கிக்கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளார்கள். மேலும் இறந்துபோன ராமகிருஷ்ணனுக்கும் பிரதிவாதிகளுக்கும் வாதியை தெரியாது என்றும் சொல்லியுள்ளார்கள். மேற்படி இறந்துபோன ராமகிருஷ்ணனுக்கு வங்கிக்கணக்கில் பணம் இருந்தாலும் கடனாக வாங்க மாட்டார் என்று இந்நீதிமன்றத்தால் முடிவுக்கு வரமுடியாது. வாதி தான் சொத்தை விற்ற வகையில் வந்த பணத்தில் கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளார். ஆனால் வருமான வரிக்கணக்கை மேற்படி வாதி தாக்கல் செய்யாவிட்டாலும் அதன் அடிப்படையில் வாதி மேற்படி ராமகிருஷ்ணனுக்கு ரூ.18,00,000/– கடன் கொடுக்கவில்லை என்று முடிவுக்கு வரமுடியாது. வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வாதியின் மகன் திருமணத்திற்கு 1–வது பிரதிவாதியும் அவரது கணவரான இறந்துபோன ராமகிருஷ்ணனும் கலந்துகொண்டுள்ள விவரம் புகைப்படம் மூலம் தெரிய வந்துள்ளது. வாதி இந்த வழக்கில் முதல் நோக்கில் அவர் தரப்பு வழக்கை நிரூபித்துள்ளதால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 118–ன்கீழ் வாதிக்கு சாதகமாக அனுமானிக்க வேண்டிய நிலையில் இந்நீதிமன்றம் உள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் இறந்துபோன ராமகிருஷ்ணனுடைய கையொப்பம் இல்லை என்றும், மேற்படி இறந்துபோன ராமகிருஷ்ணன் கமலம் டிரேடர்ஸ் என்ற பெயரில் உடுமலைப்பேட்டையில் அலுவலகம் வைத்து மொத்த முட்டை கொள்முதல் வியாபாரம் செய்துவந்தார் என்றும், மேற்படி நிறுவனத்திற்கு அவருடைய உறவினர் செல்வம் என்பவரை நிர்வாகத்திற்காக கூலிக்காக வைத்திருந்தார் என்றும், மேற்படி ராமகிருஷ்ணன் காலமானபிறகு நிறுவன அலுவலக லாக்கரில் வைத்திருந்த சொத்து ஆவணத்தையும் பணத்தையும் மற்ற ஆவணங்களையும் எடுத்துச்சென்றுவிட்டதாகவும், மேற்படி ஆவணங்களைப் பயன்படுத்தி வாதியுடன் கூட்டு சேர்ந்து இந்த வழக்கை

தாக்கல்செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள். ஆனால் அதை நிரூபிக்கும் பொறுப்பு பிரதிவாதிகளை சார்ந்தது.

**8.4)** பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி செல்வத்தை கமலம் டிரேடர்ஸில் ராமகிருஷ்ணன் பணியமர்த்தியிருந்தார் என்பதை நிரூபிக்க எவ்வித சாட்சியையும் முன்னிலைப் –படுத்தவில்லை. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் மேற்படி ராமகிருஷ்ணனுடைய கையொப்பம் அல்ல என்று நிரூபிக்கும் பொறுப்பு பிரதிவாதிகளை சாரும். வாதி முதல் நோக்கில் அவர் தரப்பு வழக்கை நிரூபித்துள்ளதால், இந்திய சாட்சிய சட்டப்படி மேற்படி கையெழுத்து ராமகிருஷ்ணனின் கையெழுத்து அல்ல என்று நிரூபிக்கும் பொறுப்பு பிரதிவாதிகளைத்தான் சாரும், அவ்வாறு பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்க நடவடிக்கை மேற்கொள்ளாததால் வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் உள்ள கையொப்பம் இறந்துபோன ராமகிருஷ்ணனுடைய கையொப்பம் அல்ல என்று முடிவுக்கு வரமுடியாது. எனவே பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து வாதிக்கு தாவா தொகையை வட்டியுடன் பிரதிவாதிகள் திரும்ப செலுத்தவேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எழுவினா எண்.1 முதல் 3 க்கு விடை காண்கிறது.

**9. வினா எண்.4:–**

வழக்கு சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும் இவ்வழக்கின் செலவு தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டும் என்று வினா எண்.4 க்கு இந்நீதிமன்றம் விடைகாண்கிறது.

**முடிவில்,**

வாதிக்கு, பிரதிவாதி தொகை ரூ.20,52,000/–(ரூபாய் இருபது இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும்)மும், செலுத்த வேண்டும் என்றும், அசல் தொகை ரூ.18,00,000/– க்கு தாவா தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை 9% வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூல் ஆகும் தேதி வரை 6% பின்வட்டியும் செலுத்த வேண்டுமென்றும், மற்றும் வழக்கு செலவுத் தொகையை பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால்

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.18 18:27:06 +0530

4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.

**வாதி தரப்பு சாட்சிகள்:–**

வா.சா.1 – கோவிந்தசாமி (வாதி)
வா.சா.2 – ராமலிங்கம்
வா.சா.3 – ராமகிருஷ்ணன்
வா.சா.4 – தம்புராஜ்

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| ஆவணங்களின் வரிசை எண் | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.06.2017 | கடனுறுதிச்சீட்டு - அசல் |
| வா.சா.ஆ.2 | 20.04.2017 | கிரைய பத்திரம்–அசல் |
| வா.சா.ஆ.3 | 03.08.2018 | வழக்கறிஞர் அறிவிப்பு –அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | 04.08.2018 | மேற்படி அறிவிப்பை 1–ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை–அசல் |
| வா.சா.ஆ.5 | 04.08.2018 | இளவர் 3–ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை –அசல் |
| வா.சா.ஆ.6 | 04.08.2018 | மைனர் 3–ம் பிரதிவாதியின் தாயார் 1–ம் பிரதிவாதி/கார்டியன் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை –அசல் |
| வா.சா.ஆ.7 | 2016, 2017 | வருமானவரி தாக்கல்செய்ததற்கான வருமானவரி படிவம் – பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.8 | 2017, 2018 | வருமானவரி தாக்கல்செய்ததற்கான வருமானவரி படிவம் – பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.9 | – | வாதியின் மகன் திருமண அழைப்பிதழ் –அசல் |
| வா.சா.ஆ.10 | – | வாதியின் மகன் திருமணம் சம்பந்தப்பட்ட வீடியோ அடங்கிய குறுந்தகடு |
| வா.சா.ஆ.11 | – | வாதியின் மகன் திருமணம் சம்பந்தப்பட்ட வீடியோ அடங்கிய பென்டிரைவ் |
| வா.சா.ஆ.12 | – | வாதியின் மகன் திருமணத்தில் 1–வது பிரதிவாதியும், |

| | | |
|---|---|---|
| | | அவரது கணவரும் கலந்துகொண்டதற்கான புகைப்படம் (எண்ணிக்கை-7) |
| வா.சா.ஆ.13 | 15.11.2025 | Photo point கடைக்காரர் கொடுத்த சான்றிதழ் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்**

1. பி.சா.1 – சரண்யா

2. பி.சா.2 – யோகேந்திரா

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-**

| ஆவணங்களின் வரிசை எண் | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 01-12-2016 முதல் 30-06-2017 | கமலம் டிரேடர்ஸ் நிறுவனத்தின் இந்தியன் வங்கி கணக்கு பட்டியல் - நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 2015 – 2016 | ராமகிருஷ்ணன் செலுத்திய வருமான வரி தொடர்பான விவரங்கள்– நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 2016 – 2017 | ராமகிருஷ்ணன் செலுத்திய வருமான வரி தொடர்பான விவரங்கள்– நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 2017 – 2018 | ராமகிருஷ்ணன் செலுத்திய வருமான வரி தொடர்பான விவரங்கள்– நகல் |
| பி.வா.சா.ஆ.5 | 2018 – 2019 | ராமகிருஷ்ணன் செலுத்திய வருமான வரி தொடர்பான விவரங்கள்– நகல் |
| பி.வா.சா.ஆ.6 | 31.05.2017 | கோவை கங்கா மருத்துவமனை சீட்டு மற்றும் 3 பில்கள்–அசல் |
| பி.வா.சா.ஆ.7 | – | கங்கா மருத்துவமனையில் பி.சா.2–ன் தந்தைக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம் –அசல் |
| பி.வா.சா.ஆ.8 | 03.06.2017 | மருந்துச்சீட்டு – அசல் |

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.18 18:27:26 +0530

4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.

Fair/ Draft Judgment

O.S.No.328/2018
Date : 18.02.2026

IV$^{th}$ ADJ, Udumalpet